## கொரோனா தொற்றையடுத்து

# உலக அளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.8% குறைந்துள்ளது

## பேராசிரியர் ராஜ்பாலா தகவல்

பெங்களூரு,ஏப்.16: கொரோனா தொற்றையடுத்து உலக அளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.8 சதவிகிதமாக குறைந்துள்ளது என்று சட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராஜ்பாலா தெரிவித்தார்.

பெங்களூரு சி.எம்.ஆர். சட்ட பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பசிபிக் பிராந்திய வர்த்தகத்தில் சந்தித்து வரும் பிரச்னைகள், சவால்கள் குறித்த கருத்தரங்கத்தில் கலந்து கொண்ட அவர் பேசியதாவது:''பசிபிக் பிராந்தியத்தின் வர்த்தகத்தில் இந்தியா, ஜப்பான், சீனா நாடுகளின் கைகள் ஓங்கியுள்ளன. இருந்தாலும் இந்த பிராந்தியத்தில் நடைபெறும் வர்த்தகத்தில் பல்வேறு பிரச்னைகள், சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. இதை கருத்தில் கொண்டு சர்வதேச வர்த்தக விதிகள் புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சர்வதேச வர்த்தகம் தொடர்பாக நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் மனித உரிமை, பெண்களுக்கு சம வாய்ப்பு உள்ளிட்டவை முக்கியமாக இடம் பெறுகின்றன.

கெரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் 21-ம்நூற்றாண்டில்வர்த்தகத்தில் பல்வேறு சவால்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கொரோனா தொற்றையடுத்து உலக அளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.8 சதவிகிதமாக குறைந்துள்ளது. அப்படியிருந்தாலும் வரும் நாட்களில் இதிலிருந்து இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது'' என்றார்.